**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**O.S. No.585/2025**
**Deposition of Witness for the Plaintiff – PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **சிங்காரவேல்** | **Caste:** | |
| **Father/ Husband Name** | **ராமசாமி** | **தொழில்** | டெக்ஸ்டைல் தொழில் |
| **Village:** | **கஸ்பா கரூர் டவுன்** | **Religion:** | |
| **Taluk:** | **கரூர்** | **Age :** | 65 |

The Oaths Act 1969 (Act 44/1969) – இன் விதிமுறைகளின் படி 27.03.2026 நாளாகிய இன்று திரு.சி.வேடியப்பன். M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் அசல் வழக்கை பாகப்பிரிவினை கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை நானும், பிரதிவாதிகளும் கூட்டாக கிரயம் பெற்றோம். நாங்கள் அனைவரும் தாவா சொத்தை கிரயம் பெறும்போது கிரயத்தொகையில் 30 சதவீதத்தை நானும், மற்றும் 30 சதவீதத்தை 2 வது பிரதிவாதியும், 1 மற்றும் 3 வது பிரதிவாதிகள் தலா 20 சதவீத தொகை கொடுத்து தாவா சொத்தை கிரயம் பெற்றோம். தாவா சொத்தை நாங்கள் நால்வரும் கூட்டாக அனுபவிக்க முடியாது என்பதால், தாவா சொத்தில் பிரதிவாதிகள் செலுத்திய தொகையை ரூ. 20,00,000/ஐ நான் பிரதிவாதிகளுக்கு செலுத்தியதில், அவர்கள் அனைவரும் மேற்படி தொகையை விகிதச்சாரப்படி அவர்கள் பிரித்து கொள்ள வேண்டும் என்றும், நான் தாவா சொத்தை முழுவதுமான அனுபவித்து கொள்ள வேண்டும் என்று எனக்கும், பிரதவாதிகளுக்கு இடையே உடன்பாடு ஏற்பட்டது. 1 மற்றும் 3 பிரதிவாதிகள் அவர்கள் பங்குக்கு உண்டான தொகையை விகிதச்சாரப்படி தலா ரூ. 4,00,000

பெற்றுக்கொண்டார்கள். 2 வது பிரதிவாதி அவருக்கு உண்டானவிகிதச்சார தொகை ரூ. 6,00,000 பெற்றுக் கொண்டார். அதனால், நானும், பிரதிவாதிகளும் கூட்டாக சேர்ந்து தாவா சொத்தை பொறுத்து சமரசம் ஏற்பட்டுவிட்டதால், ஒத்திசைவு மனு தாக்கல் செய்து, அந்த ஒத்திசைவு மனுவின்படி தாவா தீர்ப்பாகவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**(பிரதிவாதிகள் வழக்கறிஞர் ஆஜர். சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லைஎன்று தெரிவித்துவிட்டார். )**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.